பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஆவணி மீ 27 உ புதன்கிழமை (12-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 22 கதிர்: 192

# 50 இளைஞர்கள் படுகொலை; இராணுவத்தின் பழிவாங்கல்!

## சத்துருக் கொண்டான் பகுதி இளைஞரே படுகொலை!

கொழும்பு, செப். 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்தது 50 அப்பாவித் தமிழர் கொலையுண்ட சம்பவம் பற்றி மேலும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

மட்டக்களப்பு நகரில் இருந்து நான்கு கிலோ மீற்றர் தொலைவில் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பயிற்சி முகாமில் வைத்தே இந்தக் கொலைகள் இடம்பெற்றன என்று தமிழ்க் குழு ஒன்றின் பிரதிநிதி ஒருவரை ஆதாரம் காட்டி இந்திய வானொலி நேற்றுக் காலைஅறிவித்தது.

கொல்லப்பட்டவர்கள் சத்துருக் கொண்டான், பிள்ளையார் கோயிலடி ஆகிய இடங்களில் இருந்து பிடித்துச் செல்லப்பட்டவர்கள் என்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை நடக்கிறது என்கிறார் உயர் அதிகாரி

கொழும்பு, செப். 12

மட்டக்களப்பில் குறைந்தது 50 அப்பாவித் தமிழர்கள் கொலையுண்டதாக் கூறப்படும் சம்பவம் பற்றி விசாரணை நடத்தப்படுகிறதாம்.

இலங்கை இராணுவ உயர் அதிகாரி உபாலி செனவிரத்தினா இவ்வாறு தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

[உ-எ]

## வடபகுதி மதகுருமார் இருவர் கொழும்பில் கைதாகி விடுவிப்பு

### சேதப் படங்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், செப். 12

வடபகுதியைச் சேர்ந்த தென்னிந்திய திருச்சபையின் மதகுருமார்கள் இருவர் கொழும்பில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கொள்ளுப்பிட்டி பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இவர்கள், நீண்ட விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்,

விசாரணையின் போது மதகுருமார்களிடம் இருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புச் சம்பவம் குறித்து புலிகள் பிரமுகர் கரிகாலன் பேட்டி

கொழும்பு, செப். 12

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் பழிவாங்கல் நடவடிக்கையாகவே மட்டக்களப்பு மாவட்டத்தில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் நேற்று அளித்த பேட்டியொன்றில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

கொழும்பில் உள்ள இந்திய வானொலி செய்தியாளருக்கு தொலைபேசி மூலம் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சத்துருக்கொண்டான் பகுதியைச் சேர்ந்த 50 இற்கும் அதிகமான இளைஞர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டு, டயர் போட்டு எரிக்கப்பட்ட சம்பவம் குறித்து குறிப்பிடுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

இரண்டு ஊர்காவல்படையினர் கொலையுண்டதற்குப் பழிவாங்கல் நடவடிக்கையாக இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர் சொன்னார்.

(உ-எ)

## நகர தபால்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ். நகரப் பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கான தபால்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று காலை ஒன்பது மணி முதல் பகல் பன்னிரண்டு மணி வரை மட்டுமே விநியோகிக்கப்படும்.

யாழ். பிரதம தபாலதிபர் திரு. எஸ். பரராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

[ஒ-3]

## நல்லூர் ஆலயத்திலும் நள்ளிரவுக் குண்டு!

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் முருகன் ஆலயமும் அரசாங்கப் படையினரின் இரவுக்குண்டு வீச்சுக்குத் தப்பவில்லை,

திங்கட்கிழமை இரவு 12 15 மணியளவில் வந்த அவ்ரோ விமானம் போட்ட நான்கு குண்டுகளில் ஒன்று நல்லூர் முருகன் ஆலய வாசலில் இருந்து சுமார் 15 யார் தொலைவில் உள்ள, நாவலர் மணிமண்டபத்துக்கு முன்னால் விழுந்து வெடித்தது.

மணிமண்டப வளவுக்குள் இருந்த கிணறும், சுவர்களும் சேதமடைந்தன.

நள்ளிரவுக் குண்டு நல்லூர் முருகனின் முன்வீதியில் வீசப்பட்ட போது அங்கு அவன் அடியில் பாதுகாப்புக் கோரி ஆயிரக்கணக்கான மக்கள் தஞ்சம் அடைந்திருந்தனர்.

(அ-7-143)

## தபால் சேகரிக்கச் சென்று ஏமாந்து திரும்பிய மக்கள்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் தபால் நிலையத்தில் நேற்றுப் பகல் திடீரென தபால் விநியோகம் நிறுத்தப்பட்டதால் மக்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

யாழ் நகரப் பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கான தபால்கள் நேற்றுக் காலை 9 மணி முதல் இரண்டு மணி வரையும் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அறிவித்தபடி நேற்றுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 25 நாட்களுக்குப் பின்னர் நெடுந்தீவு மக்களுக்கு உணவு

யாழ்ப்பாணம், செப். 12

கடந்த 25 நாட்களுக்குப் பின்னர் - நேற்று இரண்டு வள்ளங்களில் உணவுப்பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

நெடுந்தீவு - குறிகாட்டுவான் பகுதிகளுக்கு சேவையில் ஈடுபட்ட வள்ளங்களை கடற்படையினர் எடுத்துச் சென்றதை அடுத்து கடந்த 25 நாட்களுக்கு மேலாக அங்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படவில்லை.

அங்கு ஏற்பட்ட பட்டினி நிலையைப் போக்கும் வகையில் வேலணை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. என். தனபாலசிங்கம் எடுத்த முயற்சியை அடுத்து இரு வள்ளங்கள் மூலம் 150 மூடை அரிசி, சீனி, மா ஆகியன அனுப்பப்பட்டன.

அதேவேளை, இம் முறை கப்பல்மூலம் வந்த பொருள்களில் நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருள்கள் பருத்தித்துறையில் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவற்றை படகுகள் மூலம் புங்குடுதீவுக்கு எடுத்து செல்ல [illegible]

[ஒ-3]

## கட்டுவன், குரும்பசிட்டியில் விமானக் குண்டு வீச்சு!

காங்கேசன்துறை, செப். 12

கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் பகுதிகளில் நேற்று முன்தினம் [திங்கள்] குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடத்தின.

கட்டுவன் சந்திப்பகுதியை நோக்கி இரு விமானங்கள் குண்டு வீச்சு நடத்தியதில் இரு வீடுகள் சேதமுற்றன.

குரும்பசிட்டியில் நடந்த தாக்குதலில் - விமான நிலைய விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட பகுதிக்கு அருகேயுள்ள ஐந்து வீடுகள் சேதமுற்றன.

[ஒ-60]

## 5ஆம் திகதி முதலே ஊரடங்கு நீக்கமாம்

### இப்போது தான் அறிவிப்பு

கொழும்பு, செப். 12

யாழ். குடாநாட்டில் உணவு விநியோகத்தை நடத்த உதவுவதற்காக இம்மாதம் 5 ஆம் திகதிநீக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் உள்ளதா என்று பலரும் கேட்கிறார்கள் ஆனால் ஊரடங்குச் சட்டம் 5 ஆம் திகதியே நீக்கப்பட்டு விட்டது: இவ்வாறு அவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

சோயா தேவை தொடர்பு கொள்ளவும்! அண்ணா தொழிலகம், இணுவில். [சி/5192]

### தவறிவிட்டது

இம் மாதம் 6 ஆம் திகதி யாழ். செயலகத்தினால் செல்வி சிவநேசமலருக்கு வழங்கப்பட்ட காசோலை [D/52 - 238535] காட்டுக் கந்தோர் ஒழுங்கைக்கும் சுவாமியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செங்குந்தா இந்துக் கல்லூரி அகதி முகாமில் அல்லது 27, சுவாமியார் வீதி கொழும்புத்துறை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [14181]

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல. 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கவும், அடையாள அட்டைகள் கவறிட்டுக் கொள்ளவும், கிளீன்கட், 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [14169]

# மூன்றாம் உலக நாடுகளுக்கு ஈராக் இலவச எண்ணெய்

பக்தாத், செப். 12

மூன்றாம் உலக நாடுகளுக்கு இலவசமாக எண்ணெய்யை வழங்கப்போவதாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் நேற்று அறிவித்தார்.

ஆனால் எண்ணெய்யை ஈராக் துறைமுகங்களில் இருந்து ஏற்றிச்செல்வதற்குத் தேவையான கப்பல்களை அந்தந்த நாடுகளே ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தெரிவித்தார்.

தற்போதைய வளைகுடா நெருக்கடியில் எந்தவிதமான நிலைப்பாட்டை மூன்றாம் உலக நாடுகள் எடுத்திருப்பினும் அவற்றுக்கு பாரபட்சமின்றி இலவசமாக எண்ணெய் வழங்கப்படும் என்றும் -

இது ஐ. நா விதித்திருக்கும் பொருளாதாரத் தடைக்கு உட்படாது என்றும் - ஜனாதிபதி ஹுசேன் கூறினார்.

என்ன ரக எண்ணெய் தேவை எவ்வளவு பீப்பாய் எண்ணெய் தேவை போன்ற விபரங்களுடன் கட்டளைகளை மூன்றாம் உலக நாடுகள் அனுப்பிவைக்கலாம் என்றும் ஈராக் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை —இலவசமாக மூன்றாம் உலக நாடுகளுக்கு எண்ணெய்யை வழங்கும் ஈராக்கின் திட்டம், ஐ. நா. பொருளாதாரத் தடைக்குள் அடங்கும் என்றும் விரக்தியின் எல்லைக்கு ஈராக் ஜனாதிபதி சென்று விட்டதையே இந்த அறிவிப்பு எடுத்துக் காட்டுவதாகவும் அமெரிக்கா கூறியது (இ-எ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி புஸ்பம் செனகரட்ணம்

தோற்றம்:
24 — 12 — 1910

மறைவு:
13 — 08 — 1990

உரும்பராய் வடக்கு காலஞ்சென்ற செனகரட்ணம் மலேயன் பென்சனியரின் அன்பு மனைவி ஆவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

ஜெயமகால்,
உரும்பிராய் வடக்கு
[சி-5195]

# லைபீரிய ஜனாதிபதி கொலை

மொன்றோவியா, செப். 12

கிளர்ச்சிக் குழு ஒன்றினால் கைது செய்யப்பட்ட லைபீரியா ஜனாதிபதி சாமுவல் டோ கொல்லப்பட்டு விட்டார் என்று ஊர்ஜிதம் செய்யப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன,

மொன்றோவியாவில் உள்ள மேற்காபிரிக்க அமைதிகாக்கும் படையின் தலைமையகத்தில் வைத்து சண்டை ஒன்றின் பின்னர் காலில் ஏற்பட்ட காயங்களுடன் இவர் கைது செய்யப்பட்ட பின்னர் போட்டி கிளர்ச்சிக் குழுத் தலைவர் பிரின்ஸ் ஜோன்ஸனால் கூட்டிச் செல்லப்பட்டார்.

ஜோன்ஸன் தனது அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி டோவை விசாரித்தார் என்றும் சூறையாடப்பட்ட அரசுப்பணம் எங்கே வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளவே இவ்விசாரணை நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

### அதிபர் கூட்டம்

காங்கேசன்துறை, செப் 12

மருதனாமடம் கோட்டத்துக்கு உட்பட்ட கொத்தணி அதிபர்கள் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (இ-68)

### பட்ட காலிலே படும்!

பரந்தனில் மிதிவெடியில் சிக்குண்டு இறந்தவரின் சடலம் அவரது சொந்த ஊரான அராலியில் உள்ள குலனையூருக்குக்கொண்டு வரப்பட்டபோது, சடலம் கொண்டு வரப்பட்ட வானில் இருந்த அவரது மனைவியின் பேர்ஸ் தங்க நகைகளுடன் காணாமற் போய்விட்டது என்று கூறப்படுகிறது.

பேர்சில் நான்கு பவுண் தாலிக்கொடி, ஒரு மோதிரம் மூன்று சிறு பிள்ளைமோதிரங்கள், ரொக்கப்பணம் 1,300 ருபா என்பன இருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. முரசுமோட்டை ப நோ. கூ. சங்க ஊழியர் என். கற்பகநாதனே மிதிவெடியில் சிக்கி இறந்தவர் ஆவார். இவருக்கு ஒரு குழந்தையும் உண்டு. [இ-161]

## அரசாங்க அறிவித்தல்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமை புரியும் சகல ஊழியர்களும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 13ம் திகதி (வியாழக்கிழமை) தற்காலிகமாக கோண்டாவிலில் இயங்கும் அலுவலகத்தில் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ந. கனகசபை,
யாழ். பிராந்திய
சுகாதார சேவைகள்
பணிப்பாளர்.
[சி-5196]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### கதிரிப்பிள்ளை கந்தசாமி

தோற்றம்: 16 – 05 – 1931

மறைவு: 12 – 08 – 1990

திதி: 11 - 09 - 1990

ஐயப்பனை தினம் தொழுவீர்
அருகிருக்கும் விநாயகரின்
மெய்யன்பனாய் வலம் வருவீர் - நீர்
கந்தசாமி எனும் பெயர் கொண்டீர்
குடும்பம் சிறக்க வாழ்ந்தீர்
ஊருக்கு உழைத்திடும்
சனசமூக நிலையத்திற்கு உற்ற துணைவராய்
இருந்து பல பணியாற்றினீர்
இன்று நீர் இல்லை ஏக்கங்கள் நெஞ்சில் .....

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஐயப்பனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள், மாமனார்,
பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.

ஐயனார் கோவிலடி,
மல்லாகம்
(14167)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி மேரி நவமணி அருளானந்தம்

அன்னையின் மடியில்:
07 — 02 — 1921

ஆண்டவன் மடியில்:
14 — 08 — 1990

திருமதி மேரி நவமணி அருளானந்தம் அவர்களின் ஆத்மசாந்திக்காக 13 - 09 - 90 மு. ப 6.00 மணிக்கு யாழ் கோவில் வீதி அருள் ஆச்சிரமத்திலும் 6.15 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்திலும் நடைபெற இருக்கும் திருப்பலிப் பூசையில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களும், நண்பர்களும், அனுதாபிகளும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆருயிரே! அன்னையே!
உன் ஆத்மா,
சாந்தியடைக!

பிரிவால் துயருறும்:
கணவன்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உறவினர்.

60/1, ஏ.
சலமன்ஸ் லேன்,
பழைய பூங்கா வீதி,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்
[14130]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
18 - 02 - 1967

மறைவு:
12 - 09 - 1989

### சிவகுருநாதன் வாசுதேவன்

[வாசன்]

எங்கள் அன்பு வாசனே!

நீ பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும் உன் நினைவு என்றும் எங்களை விட்டு அகலாது.

"மம்மி டடி"
சாவகச்சேரி
[14145]

## மரண அறிவித்தல்

### திரு. முருகேசு சின்னத்தம்பி

திரு. முருகேசு சின்னத்தம்பி (பண்டிதர், இளைப்பாறிய தலைமை ஆசிரியர், வீரகத்திப்பிள்ளை வித்தியாலயம் தொண்டமனாறு) 06-09 1990 அன்று காலமானார்.

அன்னார் குணமணியின் அன்புக் கணவனும், மு. கந்தையா இளைப்பாறிய ஆசிரியர், காலஞ்சென்ற வீரகத்தி, ஆழ்வாப்பிள்ளை, திருமதி இலட்சுமிப்பிள்ளை இராமு, திருமதி சிவகாமிப்பிள்ளை கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கா. ந நவரத்தினம், கா. ஞானாதிக்கம் (அவுஸ்திரேலியா) காலஞ்சென்ற ஜெயராசா, அருட்பிரகாசம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கட்டைவேலி, கரவெட்டியில் 07 09-1990இல் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
மு. கந்தையா [சகோதரன்]

சட்டைவேலி,
சரவெட்டி.
[14182]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடி அகதிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், செப். 12

அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடியில் நிர்க்கதி நிலையில் மர நிழல்களில் வாழ்ந்து வந்த 550 குடும்பங்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் அப்பகுதி மக்களின் நிலை குறித்து நேரில் அறிந்து ஒருவார உணவுப் பொருள்களை ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் வழங்கியுள்ளார்.

அந்தப்பகுதியில் உள்ளவர்களின் சுகாதார வசதியை சீர்படுத்த யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துடன் அவர் தொடர்பு கொண்டுள்ளார்.

மரங்களுக்குக் கீழே வாழ்பவர்களுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடிப்பகுதிகளுக்கு உதயன் செய்தியாளர்கள் அண்மையில் விஜயம் செய்ததும்—

அகதிகளின் அவலநிலையை வெளிச்சத்துக்குக் கொணர்ந்ததும் தெரிந்தவையே

(இ-3-6)

## திருமலை ந... 178 பொதும...

### தமிழரின் 150 வீடுகள், க...

கொழும்பு, செப். 12

கடந்த ஜூன் மாதம் வடக்கு - கிழக்கில் சண்டை ஆரம்பித்த பின்னர் திருகோணமலை நகரில் மட்டும் 178 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று வடக்கு - கிழக்கு மாகாண உயர் அதிகாரி ஒருவர் யு... பனத்திட... இந்திய வ... தது.

தமிழர்களு... நத மான சுமார் ... களும் கடைகளும் எ... ப்பட்டன என்றும் அவர் சொன்னார்.

## ஊரடங்கைக் காரணம் காட்டி அகதிகளுக்குக் கைவிரிப்பாம்

காங்கேசன்துறை, செப். 12

ஊரடங்கைக் காரணம் காட்டி இடம்பெயர்ந்தோர் நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்படாததால் இடம் பெயர்ந்து அகதிகளாயுள்ள மக்கள் பெரிதும் கஷ்டம் அடைகின்றனர்.

இடம் பெயர்ந்த மக்கள் தத்தமது பிரிவில் உள்ள கிராமசேவை அலுவலர்களை அணுகி இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண பெர்மிட்டுகளைக் கேட்டால் ஊரடங்கு உள்ளதால் எதுவும் செய்ய முடியாது என சில பகுதிகளில் கைவிரிக்கப்படுகிறதாம்.

தீவுப்பகுதியில் இருந்து உடைமைகள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலையில் அண்மையில் வந்துள்ள அகதிகளுக்கும் இதே கதியே ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (இ - 68)

## அவலங்களைத் தாங்கும் கடைசி எல்லையில் தமிழர்!

### பிரசைகள் குழு மகஜர்

யாழ்ப்பாணம், செப். 12

அவலங்களையும், துன்பங்களையும் தாங்கிச் சகிக்கும் சக்தியின் கடைசி எல்லைக்குத் தமிழ் பேசும் மக்கள் வந்துவிட்டார்கள். இதனை உணர்ந்து அவர்களின் துன்பங்களை நீக்க நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு யாழ் பிரசைகள் குழு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு ஆகக் கடைசியாக அனுப்பிய மகஜரில் கேட்டுள்ளது.

இம்மாதம் ஒன்பதாம் திகதியிட்டு அனுப்பப்பட்ட அந்த மகஜரில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் படும் அவலங்கள் கஷ்டங்கள் என்பன மாவட்ட ரீதியாக, புள்ளி விவரங்களுடன் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் நடக்கும் நில, கடல், வான் தாக்குதல்களால் பாதிப்படைந்த, கொலையுண்ட மக்களின் விவரம், சேதமுற்ற பொதுச் சொத்துக்களின் விவரங்கள் என்பனவும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த மகஜரின் பிரகாரம்—

★ வடக்கு - கிழக்கில் 10 ல... மக்கள் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ளனர்.

★ வடக்கு-கிழக்கில் 9லட்சம் மக்கள் அனாதரவாக்கப்பட்டுள்ளனர்.

★ வடக்கு-கிழக்கில் இறந்தவர்கள், காணாமற் போனவர்களின் எண்ணிக்கை 3,500.

★ மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 40 பேர் பட்டினியால் மரணமானார்கள்.

★ போதிய வைத்திய சிகிச்சை இல்லாததால் தீவுப் பகுதியில் 25 பேர் மரணமானார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாண மக்கள் ஒருசில மாதங்களாகவோ ஒரு வருடத்துக்கோ அவலப்படவில்லை. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வரையறை அற்ற விதத்தில் வதைக்கப்படுகிறார்கள்.

விதவைகளின் கண்ணீர், கற்புடைமாதர், யுவதிகளுக்கு இழைக்கப்பட்ட இம்சைகள், அதன் விளைவாக அவர்களின் தற்கொலைகள், மடிந்து கொண்டிருக்கும் சிசுக்கள், குழந்தைகளின் மரண ஓலம், வெறும் சந்தேகத்தின் பேரில்

[4ஆம் பக்கம் பார்க்க]

## செய்திச் சரம்

### ஆசிரிய கலாசாலை போட்டிப் பரீட்சை

பருத்தித்துறை, செப். 12

ஆசிரிய கலாசாலையில் 1991 ஆம் ஆண்டுக்கான ஆசிரிய பயிலுநர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை நடைபெறவுள்ளது. விண்ணப்ப திகதி இம் மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. [இ-118]

### படிவம் விநியோகம்

நவாலி, செப். 12

இராணுவ நடவடிக்கை காரணமாகத் தொழில் வாய்ப்பு இழந்தவர்களுக்கான விசேஷ இலவச உலர் உணவுக்கான விண்ணப்பப் படிவங்கள் தற்பொழுது நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளில் விநியோகிக்கப்படுகின்றன.

இப் படிவத்தைக் கிராம சேவகர்கள் 1 ரூபா பணம் பெற்றுக் கொண்டே விநியோகிக்கின்றனர்.

(இ - 100)

### முல்லை. அகதிகள்

பச்சிலைப்பள்ளி, செப் 12

முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த பலர் தற்போதய இராணுவ நடவடிக்கை காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பச்சிலைப்பள்ளி பகுதிக்கு வந்துள்ளனர். [இ-117]

### கோப்பாயில் அஞ்சலிக் கூட்டம்

கோப்பாய், செப். 12

இந்திய இராணுவத்தினுடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த அன்ரன் என்னும் போராளியின் ஒரு வருட நினைவு அஞ்சலிக்கூட்டம் கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்றது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த பிரமுகர்கள் பலரும் உரையாற்றினர்.

(இ - 72)

### அகதி முகாமில் பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், செப். 12

கைதடி, இரட்சண்யசேனை அகதிகள் முகாமில் தங்கியிருந்த ஓர் இளைஞர் கடந்த செவ்வாய் இரவு பாம்புக் கடிக்கு இலக்கானார்.

பத்மசிறீதரன் (வயது 22) என்னும் இந்த இளைஞர் தற்போது சாவகச்சேரி இந்துக் கல்லூரி முதலுதவி மையத்தில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-6)

### முதலுதவி பயிற்சி வகுப்பு

சாவகச்சேரி. செப் 12

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் முதலுதவிப் பயிற்சி வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அப்பகுதியில் உள்ள தொண்டர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இதனை ஒழுங்கு செய்துள்ளது (இ-6)

### ஈராக் தடுப்புக்காவலில் திருமணம்

பக்தாத், செப் 12

ஈராக் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ் காதல் ஜோடி ஒன்று தடுப்புக் காவலில் இருந்துகொண்டே திருமணம் செய்து கொண்டது.

ஈராக் படையினரால் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களிலும் தாக்குதல் நடக்கக் கூடிய இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 135 பிரிட்டிஷ் பிரசை...ில் இவர்களும் அடங்குவ...

சாதரண ... ஜீன்ஸ் அணிந்துஆட... முறையிலே தமது ...மணத்தை நடத்த இவர்... விரும்பினர் ஆனால் ஈராக் அதிகாரிகள் விடவில்லை. மணவாள உடை, கேக், பாண்ட் இசை கிறிஸ்தவ மதகுரு ஆகியவற்றுடன் திருமணத்தை நடத்தும்படி வற்புறுத்தியதுடன் இத்திருமணத்துக்கு ஈராக் டெலிவிஷனிலும் பெரும் விளம்பரம் கொடுத்தனர்.

(இ)

### மாணவர் கல்வி கலந்துரையாடல்

சாவகச்சேரி, செப். 12

மாணவர்களின் கல்வி நிலை குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் தென்மராட்சி மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இக் கலந்துரையாடலில் மட்டுவில் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு கி. பாப்பா, மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு. என். ரஞ்சன் ஆகியோரும் பங்குபற்றினர். [இ-31]

### சிறப்புப் பரிசு

... ...ழ் எழுத்தாளர் ச... நடத்தப்பட்ட ...கம் அடிகளார் நினைவு ...று கதைப் போட்டியில் ஈழத்து எழுத்தாளர் வளவை வளவனுக்கு சிறப்புப் பரிசு கிடைத்தது. (இ - 7)

## பருத்தித்துறை அஞ்சல் அலுவலகம்

பருத்தித்துறை, செப். 12

அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் சேருவதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளின் வசதிக்காக பருத்தித்துறை அஞ்சல் அலுவலகம் தினந்தோறும் காலை 8 00 மணி தொடக்கம் காலை 10 00 மணி வரை திறந்திருக்கும்.

போட்டிப் பரீட்சையில் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என பருத்தித்துறை அஞ்சல் அதிபர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (இ-118)

## ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலைகள் நிர்ணயம்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ் மாவட்டத்தில் உள்ள 23 ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக பங்கீட்டு அடிப்படையில் நிவாரணமாக வழங்கப்படவிருக்கும் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களுக்கும், தொழில் மற்றும் வருமானம் இழந்தவர்களுக்கும் உதவி அரசாங்க அதிபர் ஊடாக வழங்கப்படவிருக்கும் பெர்மிட்டுக்கும்—

1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கு பங்கீட்டு அட்டைக்கும்— வழங்கப்படவிருக்கும் அத்தியாவசியப் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

ஒரு கிலோ அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலைகள் வருமாறு:-

அரிசி - 13 ரூபா, மா 14/25, சீனி - 30 ரூபா, பருப்பு - 40 ரூபா, தேயிலை, சோப்பி 80 ரூபா, மல்லி - 40 ரூபா, சீரகம் - 60 ரூபா. பூடு - 30 ரூபா, புளி - 10 ரூபா, மிளகு - 100 ரூபா.

லக்ஸ்பிறே - 40 ரூபா 40 சதமாகவும், விட்டாஸ்பிறே 36 ரூபா 40 சதமாகவும், மெழுகுவர்த்தி 75 சதமாகவும், தீப்பெட்டி ஒரு ரூபாவாகவும், மண்எண்ணெய் லீட்டர் எட்டு ரூபாவாகவும், நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பெர்மிட் அளவுக்கு குறைவாக பொருள்கள் பெற்றால் மீதியான அளவுக்கு அடுத்த முறை பொருள்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

குடும்ப உறுப்பினர்களின் அடிப்படையில் - ஒருவருக்கு 84 ரூபாவும், இருவருக்கு 154 ரூபாவும், மூவருக்கு 210 ரூபாவும், நால்வருக்கு 252 ரூபாவும், ஐந்து பேருக்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு 315 ரூபாவும் படியே பெர்மிட் வழங்கப்படவிருக்கிறது.

(இ-3)

## சனிக்கிழமை வேலை நாள்?

கொழும்பு, செப். 12

சனிக்கிழமையையும் வேலை நாளாகப் பிரகடனப்படுத்துவது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

அரசு அலுவலகங்களில் வேலைப்பளு அதிகரித்திருப்பதாகவும் —

அதனைச் சமாளிக்கவே சனிக்கிழமையை மீண்டும் வேலை நாளாக்கும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்து வருவதாகவும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபை அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ - எ)

### விஷகடி வைத்தியர்

யாழ்ப்பாணம், செப் 12

யாழ். கொட்டடி விஷகடி வைத்தியர் டாக்டர் க. சிற்றம்பலம் தற்போது உடுவில் மானிப்பாய் வீதி 1 ஆம் கட்டையில் தங்கி இருந்து வைத்திய சேவை நடத்தி வருகிறார்.

(இ)

## இரவுக் குண்டு வீச்சு தொடர்கிறது

### வீடுகள் சேதம்; மாடு பலி

திங்கள் இரவு யாழ். நகரப் பகுதியில் மூன்றாவது தினமாக இரவுக் குண்டு வீச்சு இடம் பெற்றது.

இரவு 9. 30 மணி அளவிலும் ... 1... மணி அளவிலும் அவ்ரோ விமானம் வந்து குண்டுகளை வீசியது.

முதல் தடவை நான்கு குண்டுகளும் இரண்டாவது தடவை நான்கு குண்டுகளும் வீசப்பட்டன.

இரண்டாவது தடவை வீசப்பட்ட பீப்பாய்க்குண்டு ஒன்றினால் யாழ். வைமன் வீதியிலுள்ள வீடு ஒன்று பலத்த சேதம் அடைந்தது. மாடு ஒன்று இக் குண்டு வீச்சால் உயிரிழந்தது அங்கிருந்த கோழிப்பண்ணையில் வளர்க்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கோழிகள் இறந்தன. வீட்டுக்காரர் எவரும் அவ்வேளை அங்கு இருக்காததால் மனித உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகோட்டி கைவிட்ட 70 அகதிகளை காப்பாற்றிய தீரமிக்க இளைஞர்கள்!

யாழ்ப்பாணம், செப். 12 தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்ற எழுபது பேரை, கடலில் தத்தளிக்க விட்டு விட்டுப் படகோட்டி தப்பி ஓட, அதில் பயணம் செய்த நான்கு இளைஞர்கள் தங்கள் சமயோசித புத்தியாலும், திரத்தாலும் காப்பாற்றினார்கள்.

இச்சம்பவம் சடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அனலைதீவுப் பகுதியில் இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட படகில் அகதியாகச் செல்ல முயன்று, உயிரோடு திரும்பியதே போதும் என்று இக்கரை சேர்ந்தவர்களில் ஒருவரான எஸ். கிருஷ்ணகுமார் (வயது 25) மூலம் தெரியவந்ததாவது:-

கடந்த ஞாயிறு (9-9-1990) இரவு ஏழு மணியளவில் குழந்தைகள், பெண்கள் உட்பட சுமார் 70 பேருடன் படகு சுருவிலில் இருந்து புறப்பட்டது. அனலைதீவுக் கடலை அது தாண்டிச் சென்றுகொண்டிருந்தபோது, [சுமார் 3மணி நேரம் பயணம் செய்தபின்] நடுக்கடலில் கடற்படையின் பீரங்கிப் படகு ஒன்று தென்பட்டது.

உடனே படகோட்டி படகின் இயந்திரத்தை நிறுத்தினார். சில நிமிடங்களில் அவர் கடலில் பாய்ந்து நீந்திச் சென்றுவிட்டார்!

படகில் இருந்தவர்கள் அழுது குளறினார்கள். அவலக் குரல் எழுப்பினார்கள். மரண பயம் வந்தவர்களாக இறைவனின் நாமங்களை உச்சரித்தார்கள்.

படகில் பயணிகளாக [அகதிகளாகச்] சென்ற இளைஞர்கள் சிலர் படகின் மேற்புறத்தில் இருந்த சட்டங்களை உடைத்து துடுப்பாகப் பாவித்து வலித்துப் பார்த்தார்கள். படகு அசையவில்லை.

அவர்களில் நான்கு பேருக்குச் சமயோசித புத்தி வந்தது. படகை அந்த இடத்திலேயே நங்கூரமிட்டார்கள். தாங்கள் கடலில் பாய்ந்தார்கள். ஆழ்கடலை நீந்தி அனலைதீவுக் கரையைச் சேர்ந்தார்கள்.

அங்கிருந்த படகோட்டி ஒருவரிடம் நிலைமையை விளக்கி அவரது படகை முந்திய படகு நிறுத்தப்பட்ட இடத்துக்குக் கூட்டிச் சென்றனர்.

சுமார் 8 மணித்தியாலங்கள் கடலில் தத்தளித்த பயணிகள், தமது போன உயிர் திரும்பி வந்த உணர்வோடு திங்கள் காலை 6 மணியளவில் அனலைதீவுக் கரையை அடைந்தனர். [அ-15]

## 'லான்ட்மாஸ்டர்' மீது ஹெலி சூடு

திருநெல்வேலி, செப். 12 ஏழாலை-கட்டுவன்வீதியால் உணவுப்பொருள்களை எடுத்துச்சென்ற 'லான்ட்மாஸ்டர்' மீது நேற்று முன்தினம் [திங்கள்] ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

'லான்ட்மாஸ்டர்' சேதமின்றித் தப்பிவிட்டது. அதில் சென்றவர்களுக்கு விபரீதம் ஏதும் ஏற்படவில்லை. [ஓ-143]

## நல்லூர்,உடுவில் உ. அ.அ. பிரிவுகள்:

# தொழில் இழந்தோருக்கு நிவாரண பெர்மிட்

யாழ்ப்பாணம், செப். 12 இராணுவ நடவடிக்கை காரணமாக நல்லூர், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பாதிக்கப்பட்டு தொழில், வருமானம் இழந்தவர்களுக்கு நிவாரண பெர்மிட்டுகள் நாளை முதல் வழங்கப்படும்.

நல்லூர், உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாளை முதல் இந்தப் பெர்மிட் பெறுபவர்களின் பட்டியல் அவர்கள் உணவுமுத்திரைக்கு பொருள்கள் பெறும் சங்கக்கிளைகளில் வைக்கப்படும் என்றும், கிராமசேவையாளர்கள் வழங்கும் இலக்கத்துடன் அந்தப் பெர்மிட்டுக்களைப் பெறலாம் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை—

இடம் பெயர்ந்தோருக்கான இரண்டாம் கட்ட நிவாரணப் பெர்மிட்டுகள் அந்தந்தப் பகுதிகளில் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் சொன்னார்

(ஓ 3-6-143)

## தபால்...

காலை 9 மணிக்குத் தபால் விநியோகம் ஆரம்பமானது. எனினும் திடீரென விநியோகம் 11.45 மணியளவில் நிறுத்தப்பட்டது.

இதனால் இன்னல்களுக்கு மத்தியிலும் பெரும் ஆவலுடன் அங்குசென்ற நூற்றுக்கணக்கானவர்கள் ஏமாற்றத்துடனும் எரிச்சலுடனும் முணுமுணுத்தபடி சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

தபால் எடுக்கச் சென்றவர்கள் தமது சைக்கிள்களை பாதுகாப்பான இடத்தில் நிறுத்துவதற்கு முன்கூட்டியே எதுவித வசதிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதனால் தபால்களைப் பெறாதவர்கள் குண்டுவீச்சு விமானங்கள் வந்ததும் அவ்விடத்தை விட்டு அகன்று செல்ல நேரிட்டது. மீண்டும் சிறிது நேரத்தில் அவர்கள் வந்தபோது தபால்நிலையம் மூடப்பட்டுவிட்டது.

பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் தங்களை விட்டுப் பிரிந்திருக்கும் பாசமிக்க தமது பிள்ளைகள், உறவினர்களின்சுகநலன்களை கொண்டு வரும் கடிதங்களைச் சேகரிக்க வந்த அந்த மக்கள் ஏக்கப் பெருமூச்சுடன் பரிதாபமாக திரும்பிச்சென்றனர்.

(ஓ-3-6)

## வெள்ளிக்கிழமைக்கு முன்னர்

# ஓய்வூதிய "வவுச்சரை" செயலகத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம், செப். 12 யாழ் நகரப் பகுதியில் உள்ள வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆகஸ்ட மாத வவுச்சர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக செயலக ஓய்வூதியக் கிளையில் - காலை நேரத்தில் பெறலாம். தவறின் அவை தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

யாழ். செயலக ஓய்வூதியக் கிளை அதிகாரி ஒருவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

ஓய்வூதியம்வழங்குவதற்கான நிதி வங்கிகளுக்கு வந்துசேர்ந்ததும் வங்கிகள் கொடுப்பனவு தொடர்பாக அறிவிப்பை விடுக்கும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்கள் அந்த அந்தக் கிராமிய வங்கிகளில் வைத்து வழங்கப்படுமென்றும், நகருக்கு வெளியிலுள்ள வங்கிகளில் பணம் பெறுவோரின் வவுச்சர்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்றும் அந்த அதிகாரி கூறினார். [ஓ 3-6

# தீவுப் பகுதியில் இருந்து வருவோருக்கும் நிவாரணம்

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வருவோருக்கு ஒரு வாரத்துக்குரிய நிவாரணப் பொருள்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 5ஆம் திகதி,,.

மேலும் கூறியதாக இலங்கை வானொலிதனது இரவுச்செய்தியறிக்கையில் அறிவித்தது.

ஆனால் ஊரடங்கு நீக்கம் பற்றி அரசாங்கத் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் நேற்று வரை வேறு அறிவித்தல் ஏதும் வெளியிடப்படவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது. (உ-எ)

## அவலங்களை----

கைது செய்தல், அப்பாவி இளைஞர்களைச் சித்திரவதை செய்தலும் கொல்லுதலும், ஏனையோரின் மரணங்கள்—இவற்றின் விளைவுகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும்—என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜீவமணி ஹூல்

திருமதி ஜீவமணி ஹூல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அருட்திரு றிச்சார்ட் ஹூலின் மனைவியும், இராஜன், முக்தன், ஜீவன், ஜோதி, போல், தாமரி, நோயல் ஆகியோரின் தாயாரும், கிருபா, ஜக்கி, துஷ்பந்தி, காமினி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 12-09-1990 இன்று பிற்பகல் 2-30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஜோதி

88, செம்மணி வீதி,
நல்லூர்.

[13855]

## நீக்கிலஸ் மதுரநாயகம் [வவா]

யாழ். குருநகரைச் சேர்ந்த நீக்கிலஸ் மதுரநாயகம் (வவா) காலமானார். இவர் காலஞ்சென்ற நீக்கிலஸ் திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ஜோய்சியின் அன்புக் கணவரும், அரியராஜா [நோர்வே] ஜிம்பிறவுண், ஜெனிவா, சுதா, புறூண்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ராஜி அரியராஜாவின் மாமனாரும், திருமதி யோசேப்பின்தர்மா, பிலிப், அருமை ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற பற்றிக், விக்ரோறியா தம்பதிகளின் இளைய மருமகனும், அக்னேஸ், எட்வேட், தெசன், ரவிக்குமார், குமரேஸ், மகேஸ், துரை, சகாயராணி, சசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 11 - 9 - 90 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-30 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பற்றிக் எட்வேட் [றவி]
(மைத்துனர்)

செபமாலைமாதா கோவிலடி,
ஆனந்தவடலி றோட்,
யாழ்ப்பாணம்

(13864)

## வடபகுதி.,.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகைப்படங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமடைந்த கட்டடங்களின் புகைப்படங்களே பறி முதல் செய்யப்பட்டன.

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஒரு நிறுவனத்தில் புகைப்படங்களை கழுவுவதற்குக் கொடுத்ததைத் தொடர்ந்தே மதகுருமார்கள் கைதானதாகத் தெரியவந்தது. (ஓ)

## சத்துருக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அச்செய்தி கூறியது.

இராணுவ சீருடை அணிந்த குழு ஒன்றினாலேயே அவர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

இக்கொலைச்சம்பவம்பற்றி உறுதியான தகவல்களை ஊர்ஜிதம் செய்ய முடியாதிருப்பதாகக் கூறிய இராணுவ அதிகாரிகள், அப்பாவித் தமிழர் பலர் காணாமற்போன விஷயத்தை ஊர்ஜிதம் செய்யவோ [illegible] தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

# அறிவித்தல்

## இலங்கை வங்கி
### ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
### [ மேற்தரக் கிளை ]

மேற்படி கிளையின் இடம்மாற்றம் சம்பந்தமாக கலந்துரையாடலுக்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இன்று 12 - 9 - 90 காலை 10-00 மணிக்கு ஆனந்தகுமாரசாமி விடுதி, யாழ். பல்கலைக்கழகத்தில் சமுகமளிக்கவும்.

பிரதான முகாமையாளர்

(சி/5198)

# மரண அறிவித்தல்

## அப்புத்துரை தேவானந்தன்

(பொறியியலாளர்-லுமும்பா பல்கலைக்கழகம்-மாஸ்கோ)

கந்தரோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற சி. மு. அப்புத்துரை, திருமதி சேதுநாயகி அப்புத்துரை ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும்; தற்பரானந்தனன் [அதிபர்-கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை]; நித்தியானந்தன் [நில அளவையாளர்], சர்வானந்தன் [எரியூட்டுநர்-சீமெந்துக் கூட்டுத்தாபனம்-காங்கேசன் துறை], திருமதி குலகுணேஸ்வரி கந்தையா, திருமதி குலகுணராணி செல்வக்குமாரன், செல்வி குலகுணசக்தி அப்புத்துரை [கிராமிய வங்கி சுன்னாகம் ப. நோ. கூ. ச. கிளை] ஆகியோரின் இளைய சகோதரனும்; திருமதி நகுலாம்பிகாதேவி தற்பரானந்தன் [ஆசிரியை], கந்தையா [நூலக மேற்பார்வையாளர்-யாழ். பொது சன நூலகம்], செல்வக்குமாரன் [ஆசிரிய ஆலோசகர்-இராமநாதன் கல்லூரி], திருமதி சித்திரா சர்வானந்தன் ஆகியோரின் மைத்துனருமான தேவானந்தன் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [12-09-90] புதன்கிழமை பி.ப. 6 00 மணிக்கு கொழும்பு-கனத்தை பொது மயானத்தில் நடைபெறும்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(C/5197)

தகவல்;
அ. தற்பரானந்தன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org